
கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம்
மறை வளர ஒன்றிணைவோம்

தாரம்

கத்தோலிக்க சஞ்சிகை - ஆரம்பம் 1997



2025 மார்கழி தாய்-28 சேய்-169



வெளியீடு ~ கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம்.

விலை~60/-

இவ் வருடம் முழுவதும் எம்மை வழுவாது
காத்து வந்த இறைவன் மலரும்
புதுத்தாண்டிலும் அருள் கூர்ந்து காத்திருவார்.



NOHA ENTERPRISES
IMPORTERS



Tel: 011 243 7468
No.21, China Lane, Colombo-11
Email: pushpagomez15@gmail.com

தாய் THAAI
எமது எண்ணம்

December 2025

P.O. Box: 1233, Colombo
Mobile: 077 7289960
e.mail:anandapulle@yahoo.com
anandapulle@hotmail.com
www.colombostjosephvazmandram.lk

புதிய ஆண்டு எமக்கு பல எதிர்பார்ப்புக்களை தருகிற ஆண்டாக இருக்கிறது. இலங்கை நாடு என்ற ரீதியில் இயற்கை சீற்றத்தினால் பாதிக்கப்பட்டு, மீளக் கட்டியெழுப்பும் எதிர்பார்ப்போடு பலரும் இணைந்து பயணிக்கிறார்கள். அத்தோடு தனிப்பட்ட ரீதியிலும் ஒவ்வொருவரும் தமது வாழ்வைக் கட்டி எழுப்பதமது உழைப்பினாலும், உறுதியினாலும் இறை நம்பிக்கையுடனும் இவ் ஆண்டை ஆரம்பித்து இருக்கிறார்கள். ஆண்டவர் நம்மோடு இருக்கிறார் என்ற நம்பிக்கையோடு பயணிப்போம்.

எமது கிறிஸ்தவ திருமுழுக்கின் அழைப்பானது, ஆண்டவருக்கு பணி செய்ய எம்மை அழைத்து நிற்கிறது. குருக்கள், துறவிகள் போலவே பொது நிலையினரும் வழிபாடுகளுக்கு மேலதிகமாக திரு அவையில் விசேடமாக பங்குத் திரு அவையில் பல தலைமைத்துவ பொறுப்புகளை ஏற்று பணி செய்ய அழைக்கப்படுகிறோம். இப் புதிய ஆண்டில் இது பற்றியும் சிந்தித்துப் பார்ப்போம். எமது அன்றாட பலவிதமான வேலை பளு மத்தியில் ஆண்டவருக்காக இயலுமான பணிகளை ஆர்வத்தோடு செய்ய முன் வருவோம்.

அநுராதபுர மறை மாவட்டத்திற்கு புதிய ஆயராக நியமிக்கப்பட்டுள்ள மேதகு தேர்வு நிலை ஆயர் நிஷாந்த சாகர ஜெயம்மான்ன SSS அடிகளாரை வாழ்த்துவதோடு இதுவரை அனுராதபுர மறை மாவட்ட ஆயராக பணியாற்றிய மேதகு ஆயர் நோபட் மார்க்ஷல் அன்றாடி முஆஜ ஆண்டகை அவர்களை நன்றியோடு நினைவு கூர்ந்து அவருக்காகவும் ஜெபிப்போம்.

தாய் நீர்வாகம்

பிரதம ஆசிரியர்
அருட்பணி. ஆனந்தன் பெர்னாண்டோபுள்ளே
✆ : 0777 289960

ஆசிரியர்
அருட்பணி. ஒனாசியஸ் பெர்னாண்டோ
✆ : 0770 090005

சஞ்சிகை நீர்வாக ஒருங்கிணைப்பாளர்
திரு. எனஸ்டன் பெர்னாண்டோ –: 0774 985940
✉ : enestons@gmail.com

துணை ஆசிரியர்கள்
திருமதி. சுமதி கோமஸ் –: 0773 672113
திரு. ஜெயக்குமார் பெர்னாண்டோ –: 0777 781275

கணனி வடிவமைப்பு
திரு. பேடினன்ட் டிவோட்டா
JRCA DIGITAL GRAPHICS PVT LTD

இணையத்தளம்
www.colombostjosephvazmandram.lk

இயேசு எம்மோடு என்றும் இருக்க விரும்புகிறார்

"காலம் நிறைவேறிய போது கடவுள் தம் மகனை அனுப்பினார்"

(கலாத்தியர் 4:4)

இதற்கிணங்க கிறிஸ்து பிறப்பு இவ்வுலகில், இவ்வுலக வரலாற்றில் புதிய அத்தியாயத்தைப் புரட்டிப் போடுகிற நிகழ்வாக மாறுகிறது. கிறிஸ்து இவ்வுலகில் பிறந்த காலகட்டத்தை நோக்குவோமானால், உரோம அரசு ஐரோப்பிய, வட ஆபிரிக்க மற்றும் மேற்காசிய நாடுகளைத் தன்னகத்தே கொண்ட மாபெரும் பேரரசாகவும் போக்குவரத்து, வணிபம் நன்கு கட்டமைக்கப்பட்ட காலகட்டமாகவும் இருந்தது. உலக அரங்கில் இது இவ்வாறிருக்க, இஸ்ராயேல் மக்களுடைய வாழ்வில், விசேடமாக பாலஸ்தீன நாட்டில் வாழ்ந்த யூத மக்களுக்கு இது ஒரு எதிர்பார்ப்பின் காலமாக அமைந்தது.

கடவுளால் அனுப்பப்படும் ***"மெசியா"*** அதாவது மீட்பர் எமது நாட்டிற்கு, இனத்திற்கு விடுதலை தருவார் என எதிர்பார்த்திருந்த காலம். இவ்வாறான காலகட்டத்திலேயே இயேசு மனுவுரு எடுத்து நம்பிக்கையின், எதிர்பார்ப்பின் சின்னமாக இவ்வுலகில் உதிக்கிறார். **இன்று ஆண்டவராகிய மெசியா எனும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்"** (லூக்கா 2:11)

எமக்காய் பிறந்த மீட்பர் **"வாக்கு மனிதனானார், நம்மிடையே குடி கொண்டார்"** (யோவான் 1:14) எனும் இறைவாக்கிற்கு இணங்க, எம்மிடையே ஒருவராக, எம்மிலே ஒருவராக, நாசரேத்து எனும் ஊரில் ஒரு சாதாரண தச்சனின் மகனாக, ஒரு சாதாரண குடும்ப பெண்ணின் மகனாக வாழ்ந்து மனித குலத்தின் இன்ப துன்பங்களையும் சுக துக்கங்களையும் நன்கு அறிந்தவராக வாழ்ந்தார். மேலும் அவர் எம்மைப் போல ஏழ்மையை, புலம்பெயர்வை சந்தித்தார். ***"எல்லா வகையிலும் நம்மைப்***



போலச் சோதிக்கப்பட்டவர்" **(எபிரேயர் 5:15)** எனும் இறைவாக்கு எந்தளவு தூரம் இயேசு மனித இயல்புடன் இவ்வுலகில் வாழ்ந்தார் என்றும், எனினும் பாவம் செய்யாதவர் என்பதையும் சுட்டிக்காட்டுகிறது.

எம்மோடு, எம்மில் ஒருவராக வாழப் பிறந்தவர் இன்றும் எம்மோடு, எம்மத்தியில் வாழ்கிறார். எமது மகிழ்வு, எதிர்நோக்கு, ஏக்கம், கவலை அவரது மகிழ்வு, எதிர்நோக்கு, ஏக்கம் கவலையாக மாறுகிறது என்றால் மிகையாகாது. அவரது பிறப்பு இவ்வுலக வரலாற்றை இரண்டாகப் பிரித்து, கிறிஸ்துவுக்கு முன் மற்றும் பின் என பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியதற்கு காரணம் அவரது உடனிருப்பேயாகும். ஒவ்வொரு நத்தார் கொண்டாட்டமும் இவ்வுண்மையையே எடுத்துக் கூறுகிறது.

ஒவ்வொரு வருடமும் இயேசுவின் பிறப்புக் கொண்டாட்டம் ஒருநாள் கொண்டாட்டமாக இருந்தாலும் அவரது உடனிருப்பு என்றென்றும் நீடித்து நிலைத்து நிற்கிறது. அவர் தூ ய நற்கருணையில் வீற்றிருந்து எம்முடைய மகிழ்வை, கவலையை, எதிர்பார்ப்பை பகிர்ந்து கொள்ள ஆவலாய் இருக்கிறார். அவர் தமது மறையுடலாம் திருஅவையில் இருந்து கொண்டு எம்மோடு ஒரு தாயைப் போல பயணிக்கிறார். அவர் ஏழைகள் மற்றும் சின்னஞ்சிறியோரில் இருந்து கொண்டு எமது அன்பையும், பாசத்தையும் எதிர்பார்க்கிறார். அவர் வெறுமனே நாம் கேட்பதைத் தரும் கடவுளாக மட்டும் இல்லாது எம்மிடம்

தொடர்ச்சி 5ம் பக்கம்....

இயேசு எம்மோடு...

இருப்பதையும் தம்மோடு பகிருமாறு எம்மை கடவுளுக்கும் **"கொடுப்பவர்களாக"** உயர்த்தி அழகு பார்க்கிறார்.

இயேசு இவ்வுலகில் வாழ்ந்த போது இடம்பெற்ற நிகழ்வான, கானாவூர்த் திருமண நிகழ்வை நாம் உற்றுநோக்குவோமானால் (யோவான் 2ஆம் அதிகாரம்) அங்கே ஒரு குடும்பத்தின் மகிழ்வான தருணத்தில் அவர் இருக்கிறார். தன் தாய் அவர்களின் மகிழ்ச்சியில் பங்கம் ஏற்படுவதை அறிந்து, அறிவித்தவுடனே அவர்களுக்கு **"இரட்டிப்பான மகிழ்ச்சியை" கொடுக்கிறார். பின்னயது முன்னையதைவிடச் சிறந்ததாக இருந்தது.** (யோவான் 2:10)

இந்நிகழ்வின் மூலம் இயேசு எமது இன்ப துன்ப நேரங்களில் எம்மோடு இருக்கிறார். நாமும் இந்த திருமண வீட்டாரைப் போல அன்னை மரியாவையும், இயேசுவையும் அவரது சீடர்களையும் எமது வீட்டின் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வரவேற்று உபசரிப்போமானால் எம் குறைகளும் நிறைகளாகும். எமது வருத்தங்களும் சந்தோசங்களாக மாறும் என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

இவ்வருட நத்தார் கொண்டாட்டத்தின் போது வெறுமனே பாலன் குடிலை அமைத்து இயேசு பிறப்பை நினைவு கூறாமல் இயேசுவை, மாதாவை, சூசையை எம் குடும்பத்தில் வரவேற்று அவர்களது உடனிருப்பை உய்த்துணரும் தருமணமாகவும் அது வாழ்நாள் அனுபவமாகவும் மாற வேண்டும் என முடிவெடுப்போம்.

அருட்பணி. அ. உதயதாஸ்
விரிவுரையாளர், தேசிய குருமடம், கண்டி

கொழும்பு உயர் மறைமாவட்ட கத்தோலிக்க தமிழ் இளைஞர் மன்ற புதிய நியமனங்கள் - 2026

கொழும்பு உயர் மறைமாவட்ட கத்தோலிக்க தமிழ் இளைஞர் மன்ற குழு

தலைவர் :
Stafone
புனித அந்திரேயார் ஆலயம்.

உப தலைவர் :
Davin Fernando
புனித அன்னம்மாள்,அன்னை வேளாங்கண்ணி ஆலயம்.

செயளாலர் :
Shemorin
புனித செபஸ்தியார் ஆலயம்.

உப செயலாளர் :
Jerin
புனித யாகப்பர் ஆலயம்.

பொருளாளர் :
Aloison
புனித அன்னம்மாள்,அன்னை வேளாங்கண்ணி ஆலயம்.

உப பொருளாளர் :
Akash
புனித அந்திரேயார் ஆலயம்.



மத்திய கொழும்பு டீனரி இளைஞர் மன்றம்

தலைவர் :-
Johan
புனித சமாதானத்தின் இராக்கினி ஆலயம்.

செயளாலர் :
James
புனித செபஸ்தியார் ஆலயம்.

பொருளாளர் :
Sharon
புனித செபஸ்தியார் ஆலயம்.

Deanery coordinator :
Rev. Fr. Ananda Fernandopulle.

"DELEXI TE" "நான் உங்களை அன்பு செய்தேன்"

திருத்தந்தை பிரான்சிஸினால் ஆரம்பிக்கப்பட்டதும், திருத்தந்தை 14 ஆம் லியோவினால் பிரசுரிக்கப்பட்டதுமான **"நான் உங்களை அன்பு செய்தேன்"** (Dilexi Te) திருத்தூது சுற்றுமடலானது, ஏழைகள் பால் கொண்டுள்ள அன்பானது, தனிப்பட்ட சுய விருப்பத்துக்குரிய ஒன்றல்ல எனவும், மாறாக இது புனிதத்துவத்திற்கான ஒரு வழி மற்றும் திரு அவையினுடைய அடையாளம், பணி ஆகியவற்றின் ஓர் உருவாக்கும் பரிமாணம் என உறுதிப்படுத்துகிறது. விவிலியத்திலே வேரூன்றி, திருஅவை தந்தையர்களோடும், புனிதர்களுடைய சாட்சிகளோடும் இணைந்து இச் சுற்றுமடலானது ஏழைகள் கிறிஸ்துவின் உடைய பிரசன்னத்தை வெளிப்படுத்துகிறார்கள் எனவும், ஏழைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தி நிற்கின்றது. இந்த ஆவணமானது பல தனிப்பட்ட நபர்களுக்கும், அமைப்புகளுக்கும் வறுமை, சமத்துவமின்மை மற்றும் தூக்கி எறியப்படும் கலாச்சாரம் ஆகியவற்றை நிலைபெறச்செய்யும் பாவத்தினுடைய கட்டமைப்பினை எதிர்கொள்ள சவால் விடுக்கின்றது.

ஏழைகள் உதவிகளைப் பெறும் செயலற்ற பெருநர்கள் அல்ல மாறாக நட்செய்தியை பறைசாற்றும் மற்றும் புதுப்பிக்கும் துடிப்புடைய முகவர்கள் ஆவர். இச்சுற்றுமடலானது தனிப்பட்ட ஆழமான சந்திப்பை மேற்கொள்ளவும், ஒற்றுமையில் வாழவும் எம் கத்தோலிக்க திருச்சபையானது **"ஏழைகளுக்கான ஏழை திருஅவை"** ஆக மாறவும் அழைப்பு விடுக்கின்றது. அதிவேகமாக மாறிக்கொண்டு வரும் இந் நவீன தொழில்நுட்ப உலகிலே ஏழைகள் சார்பில் திருஅவையினுடைய தீர்க்கதரிசன குரல் மிக அத்தியாவசியமான அவசர தேவை என்பதனை அழகாக வலியுறுத்துகின்றது. இம்மடல், அதுமட்டுமல்லாது ஏழைகள் மற்றும் அவர்களது துன்பங்களில் எம் திருஅவையானவள் சிலுவையில் அறையப்பட்ட எம் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவை அடையாளம் காண்கிறாள் எனவும் கடவுளுடைய மீட்பின் திட்டமானது தாழ்த்தப்பட்டு, ஒடுக்கப்பட்டு அல்லது ஓரங்கட்டப்பட்டவர்களின் மேல் கொண்டுள்ள விஷேட அக்கறையின் மூலம் நிறைவேற்றப்படுகிறது என்பதையும் எடுத்தியம்புகின்றது.

"ஏழை மெசியாவில்" திகழ்கின்ற இறை திட்டமானது மானிடத்தின் மேல் கடவுளின் பரிவிரக்கத்தை வெளிப்படுத்துகிறது. தனிப்பட்ட இரக்க செயல்களை கடந்து வருமைப்பிடிக்குள் இருக்கும் பாவத்தினுடைய கட்டமைப்பை எதிர்கொள்ள எம் சிந்தனையில் ஆழமான மாற்றத்தைக்காண அழைப்பு விடுக்கின்றது.
Dilexi Te எனும் திருத்தந்தையின் இச் சுற்றுமடலானது மாற்றத்திற்கானதும் செயல்புரிவதற்குமான ஓர் அவசர அதிரடி அழைப்பு என்பது நாம் அறிந்த ஒன்றே.

நட்செய்திக்கு பிரமானிக்கமுடைய ஓர் திருஅவையானது **"ஏழைகளுக்கான ஓர் ஏழை திருசபையாக"** திகழ வேண்டும் என 14ஆம் லியோ கூறுகின்றார். இக்கருத்தானது முன்னதாக திருத்தந்தை பிரான்சிஸ், திருத்தந்தை 16ஆம் ஆசிர்வாதப்பர் மற்றும் திருத்தந்தை இரண்டம் அருளப்பர் சின்னப்பர் ஆகியோரது கருத்துக்களோடு இணைந்த, தொடர்புடைய கருத்தாகும். இவ் அழகிய அக்போஸ்தலிக்க திருத்தூது சுற்றுமடலின் தலைப்பானது, திருவெளிப்பாடு நூலிலே, அதிகாரம்3, வாக்கியம் 9ல் கூறப்படும், கடவுள் அதிகாரமற்ற கிறிஸ்தவ சமுகத்திற்கு கூறும்

"நான் உங்களை அன்பு செய்தேன், நான் உங்களிடம் அன்பு கூர்ந்தேன்"

(I have loved you) என்பதே ஆகும். இந்த பிரகடனமானது ஏழைகளிடத்தில் வளங்கள் மற்றும் செல்வாக்கு குறைவாக இருக்கின்ற போதிலும் அவர்களது மாண்பினை மதித்து எழுதப்பட்ட சுற்றுமடல் மட்டுமல்லாமல் இந்த ஆவணத்தின் நோக்கமாக, கிறிஸ்துவின் அன்பு மற்றும் ஏழைகளிடத்தில் அன்பு ஆகியவற்றின் ஆழமான இணைப்பையும் விளக்குகின்றது. இயேசுவோடு உறவாட அல்லது சந்திக்க தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் அதிகாரமற்றவர்களின் தொடர்புகள் ஓர் அடிப்படை வழி என்பதையும் கூறி நிற்கின்றது இம் மடல். மனித இரக்கம் ஒரு பொருட்டு அல்ல மாறாக அது ஒரு வெளிப்பாடு (DilexiTe,5) ஏழைகளோடு கிறிஸ்து தன்னை அடையாளப்படுத்திக்கொண்ட ஒரு சந்தர்ப்பத்தை மத்தேயு நற்செய்தி 25:40ல் காண முடியும்,

"மிகச்சிறியார் ஆகிய என் சகோதரர் சகோதரிகள் ஒருவருக்கு

தொடர்ச்சி 27ம் பக்கம்....

திருப்பலியில் இறைவார்த்தை வழிபாடு

2. இறைவார்த்தையின் முக்கியத்துவம்

2.1. இது கடவுளின் வார்த்தை

✸ “விவிலிய நூல்களில் இறைவார்த்தை அடங்கியுள்ளது. இறை ஏவுதலால் எழுதப்பட்டபடியால் இவை உண்மையாகவே கடவுளின் வார்த்தையாக உள்ளன”(இவெ24).

✸ “தமது வார்த்தையில் அவர் இருக்கின்றார். ஏனெனில் திருச்சபையில் விவிலியம் வாசிக்கப்படும்போது அவரே பேசுகிறார்”(திவ 7).

✸ எனவே “திருச்சபை நம் ஆண்டவரின் திரு உடலுக்கு வணக்கம் செலுத்துவது போலவே, விவிலியத்திற்கும் என்றும் வணக்கம் செலுத்தி வந்துள்ளது. சிறப்பாகத் திருவழிபாட்டில் இறைவார்த்தையை அளிக்கத் தவறுவது இல்லை” (இவெ 21).

✸ மேலும் “நம் வானகத் தந்தை தம் மக்களை விவிலிய நூல்களில் அன்போடு எப்போதும் சந்தித்து உரையாடுகின்றார். இறைவார்த்தையின் வலிமையும் ஆற்றலும் எத்துணை பெரிது! அது மக்களின் நம்பிக்கைக்கு உறுதியளிக்கிறது ஆன்ம உணவாகவும் அருள்வாழ்வின்... ஊற்றாகவும் திகழ்கிறது” (இவெ 21).

2.2. இதை அறிவிக்கும் பணி

❋ “நற்செய்தி அறிவிப்பதே பயணம் செய்யும் திருச்சபையின் இயல்பான பணி” (திந2).

❋ “திருவழிபாட்டுக் கொண்டாட்டத்திலும் நம்பிக்கை கொண்டோர் குழுவினுடைய பல்வேறு வாழ்க்கை முறைகளிலும் மிகச் சிறப்பாக நற்செய்தியை வெளிப்படுத்தி வந்துள்ளது”(இதி58).

❋ “கிறிஸ்துவின் நற்செய்தி, வீழ்ந்த மனிதரின் வாழ்வையும் பண்பாட்டையும் இடையறாது புதுப்பிக்கின்றது... தவறுகளையும் தீமைகளையும் எதிர்த்து நின்று முறியடிக்கிறது” (இதி58).

❋ “நற்செய்தியின் தூதுரையால் உலகம் அனைத்தையும் ஒளிரச் செய்ய வேண்டும்”(இதி92).

❋ “மனித வரலாற்றில் கூட நற்செய்தியானது சுதந்திரம், முன்னேற்றம் இவைகளுக்குச் சாதகமான புளிப்பு மாவாய் இருந்து வந்துள்ளது” (திந8).

2.3. திருப்பணியாளர்களின் கடமை


❋“ஆயர்கள்... தங்களின் திருப்பணியாளர்களோடு சேர்ந்து கிறிஸ்துவின் திருச்சபையின் செய்தியைப் போதிக்க வேண்டும்” (இதி 43).



❋ “திருப்பணியாளர்கள் கடவுளின் நற்செய்தியை எல்லாருக்கும் போதிப்பதைத் தங்கள் முதல் கடமையாகக் கொண்டுள்ளார்கள்” (திவா4).

❋“அருளடையாளங்களை அளிக்கும்போதே இறைவார்த்தைப் போதனை தேவைப்படுகிறது. ஏனெனில் அவை கிறிஸ்தவ நம்பிக்கையின் அருளடையாளங்கள் அந்த நம்பிக்கை இறைவார்த்தையிலிருந்து தோன்றி அதனாலேயே ஊட்டம் பெறுகிறது. இது முக்கியமாகத் திருப்பலியின் போது இறைவாக்கு வழிபாட்டிலே நிகழ்கிறது” (திவா4).

❋“இறைவாக்குப் பணியாளர்களாக இருப்பதால், திருப்பணியாளர்கள் நாளும் கடவுளின் வார்த்தையை வாசிக்கிறார்கள் கேட்கிறார்கள் மற்றவர்களுக்கும் அதைக் கற்றுக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்” (திவா13).



தொடரும்.....

பொருளுள்ள நூலிறு திருப்பலி

(அருட்பணி. எஸ். ஆரோக்கியராஜ் எழுதிய “திருவழிபாடு ஓர் அறிமுகம்” என்ற நூலிலிருந்து சில பகுதிகள்)

அழியா உடல் வரம் பெற்ற

புனித பிரான்சிஸ் சவேரியார்

புனித பிரான்சிஸ் சவேரியார், ஸ்பெயினில் நவர்ரே என்ற மாநிலத்தில் சவேரியார் அரண்மனையில் 1506 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7ம் திகதி பிறந்தார்.

தனது 9வது வயதிலேயே தந்தையை இழந்த இவர் தாயாரின் பராமரிப்பில் வளர்ந்து கல்வி கற்று, பிரான்ஸ் நகரில் தனது உயர் கல்வியைத் தொடர்ந்தார். அங்கு புனித இக்னேசியஸ் லொயலாவுடன் நட்பு கொண்டு இயேசு சபையை நிறுவுவதில் முக்கிய பங்கு வகித்தார்.

இவர் இந்தியா உட்பட ஜப்பான், இந்தோனேஷியா போன்ற தூர கிழக்கு நாடுகளில் கிறிஸ்தவ மதத்தை பரப்பும் பணியில் ஈடுபட்டார். 50 நாடுகளுக்கு மேலாக சுமார் 38000 மைல்கள் பயணம் செய்து போதித்து வந்தார்.

இந்திய கரையோர பகுதிகளில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த பரதகுல மக்கள் இவரது போதனையால் ஈர்க்கப்பட்டு, மனம் மாறி திருமுழுக்கு பெற்று கிறிஸ்தவ மதத்தை தழுவிக் கொண்டனர். இக் குலத்தினர் இன்று தெனிந்திய தமிழ்நாட்டிலும் இலங்கைத் திருநாட்டிலும் பரந்து விரிந்து காணப்படுகிறார்கள். இந்த பரத குல மக்கள் வழிபட ஒரு பெண் தெய்வத்தை வழங்கிவிட வேண்டும் என்று மிகவும் விருப்பப்பட்டார். ஆயினும் அவர் உயிரோடு இருக்கும் வரை அவர் விருப்பம் நிறைவேற்றப்படவில்லை. இவர் இறந்த பிறகே அவர் ஆசைப்பட்டபடியே பனிமய அன்னையின் திருச்சுருபம் தூத்துக்குடி துறைமுகத்தை வந்தடைந்தது. அன்றிலிருந்து பரதகுல மக்கள் பனிமய அன்னையை தம் குல தெய்வமாக வழிபடுவதோடு, புனித பிரான்சிஸ் சவேரியாரை தம் குல போதகராக அர்ச்சிஸ்டவராக அங்கீகரித்துள்ளனர்.

புனித பிரான்சிஸ் சவேரியார் 1552 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி சீனாவில் சாங்ஸ்சுவான் தீவில் நோய்வாய்ப்பட்டு இறந்தார். அவரது உடலை போர்த்துகீசியர்கள் ஒரு புனித பொருளாகக் கருதி கோவாவில் உள்ள பெஸிலிக்கா தேவாலயத்தில் வைத்து பாதுகாத்து வருகின்றனர்.

இவருக்கு 1619 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி திருத்தந்தை 5 ஆம் பவுல் என்பவரால்



முக்திப்பேறு பட்டம் வழங்கப்பட்டது. 1622 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் திகதி திருத்தந்தை 15 ஆம் கிரகோரி அவர்களால் புனிதர் பட்டம் வழங்கப்பட்டது.

“ஒருவன் இந்த உலகத்தையே ஆதாயமாக்கிக் கொண்டாலும், தனது ஆன்மாவை இழந்து போவதால், அதன் பயன் என்ன?”

என்ற இயேசுவின் கோட்பாட்டைக் கடைப்பிடித்து வாழ்ந்து போதித்து வந்த புனித பிரான்சிஸ் சவேரியாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நாமும் எமது வாழ்வை செம்மைப்படுத்தி விண்ணகம் செல்வோம்.

– ஜெயக்குமார் பெர்னாண்டோ –

அஞ்சாதே; பேசிக்கொண்டேயிரு நிறுத்தாதே ஏனெனில், நான் உன்னோடு இருக்கிறேன்.

2025 ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட பெரும் வெள்ளம் மற்றும் மண்சரிவு

"ஒரு தேசிய பேரிடரும் கத்தோலிக்க திருச்சபையின் பங்களிப்பும்"

அறிமுகம்

2025ஆம் ஆண்டு இலங்கை வரலாற்றில் மறக்க முடியாத ஒரு இயற்கை பேரிடர் ஆண்டாக அமைந்தது. கடும் மற்றும் தொடர்ச்சியான மழையால் நாட்டின் பல பகுதிகளில் பெரும் வெள்ளமும் உயிரிழப்புகளை ஏற்படுத்திய மண்சரிவுகளும் நிகழ்ந்தன. மேற்கு, மத்திய, சபரகமுவ, தெற்கு மாகாணங்கள் மிகவும் பாதிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வீடுகளை இழந்து அகதிகளாக மாறினர். இந்த பேரிடர் இயற்கை மாற்றங்கள் மட்டுமல்ல, மனித செயல்களும் எவ்வாறு பாதிப்பை அதிகரிக்கின்றன என்பதையும் வெளிப்படுத்தியது. இச்சூழலில் கத்தோலிக்க திருச்சபை தனது மனிதாபிமான பணியின் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு பெரும் நம்பிக்கையாக விளங்கியது.

வெள்ளத்தின் காரணங்கள்

2025இல் ஏற்பட்ட வெள்ளத்தின் முதன்மை காரணம் தொடர்ச்சியான கனமழை ஆகும். தென்மேற்கு பருவமழை மற்றும் குறைந்த காற்றழுத்த மண்டலங்கள் இணைந்து குறுகிய காலத்தில் அதிக மழைப்பொழிவை ஏற்படுத்தின. இதன் காரணமாக கெலனி, களு, கின், நில்வலா, மகாவெலி போன்ற முக்கிய ஆறுகள் கரைபுரண்டன. மேலும், நகர்ப்புறங்களில் காணப்படும் முறையற்ற நகரமயமாக்கல், ஈரநிலங்களை நிரப்புதல், கால்வாய்கள் சரிவர பராமரிக்கப்படாமை போன்ற மனிதச் செயல்கள் வெள்ளத்தின் தீவிரத்தை அதிகரித்தன. குறிப்பாக கொழும்பு மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் நீர் வடிகால் அமைப்புகள் போதிய அளவில் இல்லாததால் வெள்ளநீர் நீண்ட நேரம் நிலைத்தது.

மண்சரிவுகளின் காரணங்கள்

வெள்ளத்துடன் சேர்ந்து மத்திய மலைநாடுகளில்



மண்சரிவுகள் பெரும் அழிவை ஏற்படுத்தின. கண்டி, நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி, கேகாலை போன்ற மாவட்டங்கள் அதிகமாக பாதிக்கப்பட்டன. தொடர்ச்சியான மழையால் மண் நீரால் நிறைந்து கனமானதால் மலைச்சரிவுகள் திடீரென இடிந்து விழுந்தன.

காடுகள் அழித்தல், சரியான நில பயன்பாட்டு திட்டமிடல் இல்லாமை, தேயிலைத் தோட்டங்கள் மற்றும் வீடுகள் பாதுகாப்பற்ற சரிவுகளில் அமைக்கப்படுதல் ஆகியவை மண்சரிவு அபாயத்தை அதிகரித்தன. அறிவியல் எச்சரிக்கைகள் இருந்தபோதிலும் அவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்தாதது இந்த பேரழிவை மேலும் தீவிரப்படுத்தியது.

மனித உயிர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு

இந்த பேரிடரில் பல உயிரிழப்புகள், காயங்கள் மற்றும் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்வு ஏற்பட்டது. பள்ளிகள், ஆலயங்கள், சமூக மண்டபங்கள் தற்காலிக தங்குமிடங்களாக மாற்றப்பட்டன. குழந்தைகள், முதியவர்கள், கர்ப்பிணிகள், மாற்றுத்திறனாளிகள் மிகவும் பாதிக்கப்பட்டனர். மண்சரிவு பகுதிகளில் பல வீடுகள் திடீரென மண்ணில் புதைந்ததால்

தொடர்ச்சி 10ம் பக்கம்....

09ம் பக்க தொடர்ச்சி...

மக்களுக்கு தப்பிக்க நேரமே கிடைக்கவில்லை. உடல் பாதிப்புகளுடன் கூட மனஅழுத்தம், பயம், துயரம் போன்ற உளவியல் பாதிப்புகளும் மக்களை நீண்ட காலம் வாட்டின.

சொத்து மற்றும் உட்கட்டமைப்பு சேதம்

2025 பேரிடர் நாட்டின் பொருளாதாரத்திற்கும் பெரும் சுமையாக அமைந்தது. ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்தன அல்லது முழுமையாக அழிந்தன. சாலைகள், பாலங்கள், ரயில்வே பாதைகள், மின்சார விநியோகம் பாதிக்கப்பட்டது. விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டது. நெல் வயல்கள், காய்கறித் தோட்டங்கள், தேயிலைத் தோட்டங்கள் அழிந்தன. மீனவர்கள், சிறு வியாபாரிகள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்தனர். பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகள் தற்காலிகமாக மூடப்பட்டதால் கல்வி மற்றும் சுகாதார சேவைகள் பாதிக்கப்பட்டன.

சுற்றுச்சூழல் பாதிப்புகள்

வெள்ளநீர் ஆறுகள் மற்றும் நிலத்தடி நீரை மாசுபடுத்தியது. மண்சரிவுகள் இயற்கை நில அமைப்புகளை மாற்றி, அணைகள் மற்றும் நீர்த்தேக்கங்களில் மண் தேக்கத்தை அதிகரித்தன. ஈரநிலங்கள் மற்றும் மாங்குரோவ் காடுகள் ஏற்கனவே அழிக்கப்பட்டிருந்ததால் இயற்கை பாதுகாப்பு பலவீனமடைந்தது. சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியத்தை இந்த பேரிடர் வலியுறுத்தியது.

கத்தோலிக்க திருச்சபையின் பங்களிப்பு

இந்த பேரிடர் காலத்தில் கத்தோலிக்க திருச்சபை ஒரு தாயாகவும் சேவகியாகவும் செயல்பட்டது. பல மறைமாவட்டங்களில் ஆலயங்கள், பள்ளிகள், கான்வெண்ட்கள் தற்காலிக தங்குமிடங்களாக திறக்கப்பட்டன.

Caritas Sri Lanka – SEDEC, மறைமாவட்ட சமூக சேவை மையங்கள், அருட்தந்தைகள், கன்னியர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து:

❖உணவு, குடிநீர், உடைகள் வழங்கினர்.

❖மருத்துவ உதவி மற்றும் உளவியல் ஆதரவு அளித்தனர்.

❖குழந்தைகள் மற்றும் முதியவர்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தினர்.

பல ஆலயங்களில் நிவாரண நிதி சேகரிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பப்பட்டது. திருச்சபை எந்த மதம், இனத்தைப் பார்க்காமல் மனிதாபிமான அடிப்படையில் அனைவருக்கும் உதவியது. இதன் மூலம் திருச்சபை தனது சமூக போதனையை (Catholic Social Teaching) நடைமுறையில் காட்டியது.

கற்றுக் கொண்ட பாடங்கள்

2025 பேரிடர் நமக்கு பல பாடங்களை கற்றுத்தந்தது. முதலில், காலநிலை மாற்றம் இனி எதிர்கால அபாயம் அல்ல் அது இன்றைய நிஜம். இரண்டாவது, நில பயன்பாட்டு கட்டுப்பாடுகள் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மூன்றாவது, சுற்றுச்சூழல் பாதுகாப்பு இல்லாமல் மனித பாதுகாப்பு சாத்தியமில்லை. திருச்சபையும் அரசும் இணைந்து விழிப்புணர்வு, முன்னறிவிப்பு, சமூக ஒற்றுமை ஆகியவற்றை வலுப்படுத்த வேண்டும்.

முடிவுரை

2025 ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட பெரும் வெள்ளம் மற்றும் மண்சரிவு ஒரு தேசிய சோகமாக இருந்தாலும், அது மனித ஒற்றுமையையும் வெளிப்படுத்தியது. இயற்கை பேரிடர்களை முற்றிலும் தவிர்க்க முடியாவிட்டாலும், அவற்றின் தாக்கத்தை குறைக்க முடியும். அரசின் நடவடிக்கைகள், சமூகத்தின் பொறுப்பு மற்றும் கத்தோலிக்க திருச்சபையின் கருணைமிகு சேவை இணைந்தால், எதிர்காலத்தில் ஒரு பாதுகாப்பான இலங்கையை உருவாக்க முடியும். இந்த பேரிடர் நமக்கு நினைவூட்டியது மனிதர் மனிதருக்காக நிற்கும் போது, நம்பிக்கை மீண்டும் பிறக்கிறது.

முற்றும்.

– நோயல் –

"நீர் இறைமகன் என்றால் இந்தக் கற்கள் அப்பமாகும்படி கட்டளையிடும்"

அனைவருக்கும் இனிய நத்தார் புதுவருட
நல்வாழ்த்துக்களை தெரிவிக்கிறார்கள்

LEONARD PEIRIS
&
FAMILY

(DENTEL TECHNICIAN)

E-mail: leonard_peiris@gmail.com
Tel: 011 2348 142, Mobile: 077 74 87 562
82/16, Ramanathan Flats,
Colombo-13


WE WISH YOU
Merry
Christmas
AND HAPPY NEW YEAR
J.REMITTA
STORES
IMPORTERS & EXPORTERS
Email: jrs.coonghe@gmail.com
Tel: 011 2344 287, Fax: 011 2345 361
218, BANKSHALL STREET,
COLOMBO -11

Merry Christmas

AND HAPPY NEW YEAR

NEW

JOHNAS ENTERPRICES

- Importers -

Tel: 011 234 3233

Fax: 011 243 8719

Mobile: 077 778 5495,

Email: neriousferns@gmail.com

No.7, China Lane,

Colombo-11.

அனைவருக்கும் நத்தார் புதுவருட
நல்வாழ்த்துக்களை தெரிவிக்கிறார்கள்

DANUSHKA
Importers (pvt) ltd

Dry Sea Food Dealers & Importers & Commission Agents

Mobile : +94 777 308 971
Tel/Fax : +94 112 339 749
E-Mail : danuskaimporters@gmail.com
17, China Lane, Colombo -11.

AARON ENTERPRISES

IMPORTERS DRY FISH MERCHANTS & COMMISSION AGENTS

WE WISH YOU A
Merry Christmas
AND HAPPY NEW YEAR

Mobile : 077 850 3147, Tel : 011 238 0786, Fax : 011 232 1242
41, I.X.Pereira St, Colombo -11.

அனைவருக்கும்
நத்தார் புதுவருட
நல்வாழ்த்துக்களை தெரிவிக்கிறார்கள்

SELVARANI
STORES

DRY FISH IMPORTERS
Tel : 011 234 8072
7B, I.X.Pereira St, Colombo - 11.

NEW
ROY TRADE CENTRE

Specialist / Dealers in Ladies Accessories,
Sarees, Readymade Saree Blouse, Necklace,
Imitation Jewellery

Wedding Imitation Jewellery For Rent

Tel : 011 592 0630, Mobile : 077 345 5096
44, St.Anthony's Mw, Colombo -13.



அனுராதபுர மறை மாவட்டத்தின் புதிய ஆயராக தெரிவு செய்யப்பட்டுள்ள
நற்கருணை நாதர் சபையைச் சேர்ந்த
மேதகு ஆயர் நிலாந்த சாகர ஜெயம்மான்ன
அவர்களை வாழ்த்துவதோடு, ஆயரின் பணிகள் சிறக்க
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.



கொழும்பு உயர் மறை மாவட்ட கத்தோலிக்க தமிழ் இளைஞர் மன்றம்

கொழும்பு உயர் மறை மாவட்ட கத்தோலிக்க
தமிழ் இளைஞர் மன்ற செயற்குழு






கொழும்பு 13, செக்கடித்தெரு, புனித அன்னம்மாள், அன்னை வேளாங்கண்ணி மாதா பங்கின் கதோலி நிகழ்ச்சிகள்,
டிசம்பர் 14ஆம் நாள், ஞாயிறு மாலையில் புனித அன்னம்மாள் ஆலயத்தில் நடைபெற்றது.



துயருறுவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்.

கொழும்பு, புனித லூசியாள் பேராலய பாடற் குழுவினர் மற்றும் மறைப் பாடசாலை பாடற்குழுவினரும் இணைந்து ஒழுங்கு செய்த நத்தார் கரோல் நிகழ்ச்சியானது 21. 12. 2025 ஞாயிறன்று பேராலயத்தில் இடம் பெற்றது.





கொழும்பு புனித ஜோசப் வாஸ் மன்றமானது தமது பாதுகாவலரான புனித ஜோசப்வாஸ் அடிகளாரின் திருவிழாவை 2026 ஜனவரி 15ஆம் திகதி வியாங்கல் தினத்தன்று நீர்கொழும்பு, முன்னக்கரை திருச்சிலுவை நாதர் ஆலயத்தில் காலை 10 மணி திருப்பலியில் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இத்திருவிழா திருப்பலிக்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றார்கள்.

அனைவருக்கும்
நத்தார் புதுவருட
வாழ்த்துக்களை தெரிவிக்கிறார்கள்

JOHN
Dealers in Japanese
Re-Conditioned Motor Spare Parts
MOTORS



Tel: 011 238 9086
Mobile: 077 325 3441
No:238/30.
Panchikawatte Road,
(Alahakoon Watte)
Colombo-10

அனைவருக்கும் நத்தார் புதுவருட
வாழ்த்துக்களை தெரிவிக்கிறார்கள்

YOHAN'S
VIDEO LINK

Dealers in Tamil, Hindi, English DVD & VCD, Audio CD,
Mp3 Lense Cleaner etc...

Tel & Mobile: 011 233 3557, 077 367 9845
No.37, Mahakumarage Road, Grandpass,
Colombo-14.

அனைவருக்கும் நத்தார் புதுவருட வாழ்த்துக்களை தெரிவிக்கிறார்கள்

D.D.S.
TRADERS (PVT) LTD.

IMPORTS & COMMISSION AGENT

Phone: 011 232 9698, 077 261 1409
No.46, I.X. Pereira St,
Colombo-11.

WE WISH YOU A

Merry Christmas

AND HAPPY NEW YEAR



HM

DEALERS IN DRY FISH & COMMISSION AGENT

Tel: 011 232 7001

NO.143,BANKSHALL ST,

COLOMBO-11.

WE WISH YOU A

Merry Christmas

AND HAPPY NEW YEAR

JACKSON

(PVT) LTD

Dealers In Dry Sea Food ,
Importers & Commission Agents

Mobile: 077 317 0045

Tel: 011 233 3956, 011 233 3957

No. 12-18,I.X. Pereira Mawatha,
Colombo-11

அனைவருக்கும் நத்தார் புதுவருட வாழ்த்துக்களை
தெரிவிக்கிறார்கள்

MAK
TRADERS (PVT) Ltd

Importers of Dry Fish, General Merchants & Commission Agents
25, IX Pereira Street, Colombo 11
075 9098 716

அனைவருக்கும் நத்தார் புதுவருட வாழ்த்துக்களை தெரிவிக்கிறார்கள்

VINOTH STORES

Dealers in all kind of Scrap Metels,
Old News Papers, Carton Boards,
Old Scrap Waste Paper,
Plastic & Iron

Tel: 077 752 7931, 011 247 8032
No.155, Grandpass Road, Colombo-14.

மறை பொருளான நாசரேத்தூர் குடும்பம்



கிறிஸ்துவின் மறை உடல் என்னும் கோட்பாடு சேனைக் கூட்டங்களுக்கு சிறப்பாக சேனை அமைப்பின் இதயம் போன்று விளங்கும் பிரசீடிய கூட்டங்களுக்கு பொருந்தும்.

இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாய் கூடி இருக்கிறார்களோ, அங்கே அவர்களிடம் நான் இருக்கிறேன். இந்த இறை வார்தகைகளால் நமது ஆண்டவர் நமக்கு கூறும் உறுதி மொழி என்ன? தமக்கு ஊழியம் புரியுமாறு ஒன்று கூடியிருக்கும் மக்களின் எண்ணிக்கைகளுக்கு தக்கவாறு தம் மறை உடலின் உறுப்புகளுக்கிடையே தம் பிரசன்னத்தை மிகுதியாக்குவார்.

ஆகவே சேனையார் கிறிஸ்துவின் பெயரால் அவருடைய வேலைக்காக பிரசீடியத்தில் ஒன்று கூடும் போது அவர் தம் வல்லமையுடன் அவர்கள் நடுவில் இருப்பார். அவரிடமிருந்து வல்லமை புறப்பட்டு வரும் என்பது தெளிவு அந்தச் சிறிய சேனை குடும்பத்தில் இயேசுவோடு அவருடைய தாயும், தூய யோசேப்பும் இருப்பார்கள். அவர்களுக்கு இயேசுவோடு என்ன உறவு இருக்கிறதோ அதே குடும்பத்தின் சாயலாக நாம் பிரசீடியத்தையும் கருதலாம். பிரசீடியக் கூட்டம் நடைபெறும் அறை சேனையாரின் அதிகாரத்துக்கு அப்பாற்பட்டதாக இருக்கலாம்.

நாசரேத்தூர் வீட்டை கன்னி மரியாள் நுணு நுணுக்கமாக பராமரித்தது போல், பிரசீடியம் எனும் வீட்டையும் சேனையார்கள் பராமரித்து வருகிறார்கள். நாசரேத்தூர் வீடு மிக எளிய வீடாக இருந்தது. அங்குள்ள பொருட்களும் எழியனவாக இருந்தது. ஆனாலும் அந்த வீடு அழகு வாய்ந்ததாக இருந்தது.

இவ்வுலகில் வாழ்ந்த தாய்மார்களில், மனைவியர்களில், தாய் மரியாவிற்கு ஒப்பற்ற வரம் பெற்ற ஒருவர் வேறு இல்லை. எனவே சேனையாளர்களும் தங்களுடைய சேனைக்குடும்பத்திலோ, தங்களுடைய குடும்பங்களிலோ தாய் மரியன்னையைப் பின்பற்றி வாழ்வது சாலச் சிறந்ததே...

நீர்கொழும்பு கியூரியாக்கள்

புயலே டித்வா!

இலங்கையின் தெற்கில் உட்புகுந்த நீ வடக்குவழி
வெளியேறும் முன் நீ ஆடிய ஆட்டம் தான் என்னவோ?
2025 கார்த்திகை 26ல் நீ இலங்கைக்கு தந்த
மாபெரும் பரிசை எம் நாடு காலா காலம்
பேசிக் கொண்டே இருக்கும்.

நாட்டின் எப்பக்கத்தைத் தானும்
விட்டுவைக்காத உனக்கு இந்த நாடு என்ன செய்தது.
யாருடைய கண்கள் பட்டதோ அல்லது எவருடைய
பாவமோ
உன்னை இங்கு அழைத்து வந்தது?

இந்நாட்டை முழு உலகும் விகைக்கும்படி எழில்மிகு
அழகுடன் கம்பீரத்துடன் உயர்ந்து நிற்கும்
மலை நாட்டின் மேல் உனக்கு என்ன இத்தனை
கோபம்?
மாபெரும் மலையையே புரட்டி விட்டது உன் கோபம்
நீர் வலம் மிக்க இலங்கையே நீரில் மூழ்கச்செய்து
பல அணைகளையும் தகர்த்து அனைத்து வகை
பாதைகளையும் தகர்த்தெறிந்து
மக்களை அசைய முடியாமல் தவிக்கவைத்தது
உன் கோபமா? அல்லது சாபமா?

நிலம், நீர் என இரு வழிகளாலும் நீ தந்த வேதனை
நினைத்துப் பார்க்க முடியாததே!
வீட்டு வாயிலில் நீரை பார்த்துக்கொண்டிருக்கும் போது
கூரைமேல் விழுந்ததுவோ மண்மேடு.
எம்மவர் அசையத்தானும் நொடிகள் இல்லையே
இறுதியில் மண்ணில் புதையவே விட்டுவிட்டாயே!

இன்னும் பலர் நீரின் உச்சத்தாலே மூழ்க
இன்னும் பலர் நீரினால் இழுத்துச்செல்ல
இன்னும் பலர் நிரினால் சிறைப்பட
பல மனித உயிர்களை மட்டுமா நீ அழைத்துச்சென்றாய்!
விலங்குகள் தானும் உனக்கு என்ன செய்தனவோ?
அவற்றையும் நீ விட்டு வைக்க வில்லையே!

உறவுகள் இழந்தும் உடைமைகள் இழந்தும்
மக்கள் தத்தளிக்க
ஐந்தறிவு ஜீவன்கள் என்ன பாவம் செய்தனவோ
தமது உறவுகளை இழக்கவும் துளைக்கவும்?
கூட்டமாக திரியும் வன ஜீவன்கள்



தமது கூட்டத்தை பிரிந்து அலைய
பலம் பொறுந்திய யானைகளே மண்ணுக்குள்ளும்
நீருக்குள்ளும் சிக்கி மாய
உனக்கேன் இத்தனை வெறி!

உன் ஆட்டத்தில் வீழ்ந்ததோ எம் நாடு
நீ ஓய்ந்தாலும் உன் கோபத்தின் தாண்டவம்
ஒருபோதும் ஓய்வதில்லையே!
பிள்ளைகள் பெற்றோரை தேடியும்
பெற்றோர் பிள்ளைகளைத் தேடியும்
உறவுகள் தமது சொந்த
வீடுகள் இருந்த இடத்தை தேடியும்
புகையிரதங்கள் தன் தண்டவாளத்தை தேடியும்
வாகனங்கள் தன் பாதையை தேடியும்
அலைந்து கொண்டே போகுது காலம்.


மீட்பு பணியில் நமது மற்றம் உதவி நாடுகளின்
இராணுவமும் உள்நாட்டு வெளிநாட்டு
மீட்புக்குழுக்களும் நாட்டின் பல்வேறு இட இன மத
மக்களும் ஓயாது செயற்பட இருவாரங்கள்
உருண்டோடுகின்றதே.
தெற்கிலிருந்து வந்த வள்ளங்ள், இராணுவ
வள்ளங்கள்
வானூர்திகள், விசேட கனரக வாகனங்கள்
நேரம் பாராது ஓய்வின்றி தேடுவது
உன்னால் தீண்டப்பட்ட மக்களைத்தானே!

வானில் பறக்கும் ட்ரோன் கெமராக்கள்
காட்டிய புகைப்படங்களை பார்த்தால்
நீயே உன்னை எண்ணி வெட்கப்பட்டிருப்பாய்!
முக நூலில் எம்மவர் பதிவிட்ட காணொலிகளும்
அவர்களது குரல்களும் எமது மனதில்
தோற்றிய வேதனை தான் எத்துணை எத்துணை?
டித்வா! பல இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டிருந்தாலும்
இன்னும் பல இலட்ச மக்கள் அவர்களுக்காக

தொடர்ச்சி 29ம் பக்கம்...

தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்.





கனிவுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்.


ஆதித்திருச்சபையில் கற்றுக்கொள்ளும் கிறிஸ்தவம் – தொடர் கட்டுரை –

உரோமையர் 11ஆம் அதிகாரம்

காட்டொலிவமரக் கிளைகள்

நல்ல ஒலிவமரக்கிளைகளில் சில தரிக்கப்பட்டு அதிலே காட்டொலிவமரக்கிளை ஒட்டப்படுகின்றது.

வேரின் பலத்தினால் அது செழிப்புற்று வளர்கின்றது. அதுபோன்றே நாம் கடவுளோடு ஒப்புரவாக வேண்டுமானால் அவரது அடித்தளத்தில் நாம் வாழவேண்டும். யாரோடு நாம் இணைந்து வாழ்கிறோம் என்பதைவிட இறையருளில் நாம் வாழ்கிறோம் என்பதே உண்மை. நம்மை இறைவனுக்கு அர்ப்பணித்தால் நம்மை அவர் எப்படி பயன்படுத்த திருவுளம் கொள்கிறாரோ அதற்காக நம்மை தயார் படுத்திக்கொள்ளவேண்டும்.



அதற்காகவே பலகிளைகள் தகர்க்கப்பட்டு நாம் இணைக்கப்படுகின்றோம். இதனால் எமக்குள் உயர்வு மனப்பான்மை அன்றி கடவுள்மீது அச்சமே ஏற்படவேண்டும்.ஏனெனில் கடவுள் பரிவும் கண்டிப்பும் நிறைந்தவர்.

"ஏனெனில் ஆண்டவரின் மனதினை அறிபவர் யார்? அனைத்தும் அவரிடமிருந்தே வந்தன. அவராலேயே உண்டாயின. அவருக்காகவே இருக்கின்றன."
அவரது மாட்சிமையிலே என்றென்றும் வாழ்ந்திடுவோமாக.

தொடரும்.

– திருமதி. கோமஸ் –

6ம் பக்க தொடர்ச்சி....

"நான் உங்களை அன்பு செய்தேன்"

நீங்கள் செய்ததை எல்லாம் எனக்கே செய்தீர்கள் ஏழைகளைப் பற்றி பேசும் இம்மடலில் புனித பிரான்சிஸ்னுடைய பெயர் அவர் அவ்வாறு தெரிவு செய்வதற்கான காரணம் அதன் அர்த்தம் **ஏழைகளை மறந்து விட வேண்டாம்** என்பதே ஆகும் இந்த Dilexi Te சுற்று மடலானது தனி நபர்கள் குழுக்கள் மற்றும் திரு அவைக்கு சவால் கொடுக்கும் ஏழைகளின் நீடித்த அழுகையின் தன்மையை நிலையை இங்கே படம் பிடித்து காட்டுகின்றது இந்த அழுகுரலுக்கு செவி சாய்க்காமல் இருப்பது **கடவுளுடைய தினத்திலிருந்து திரும்பிச் செல்வதாகும்.** (Dilexi Te 8) இம்மடலானது பொருளாதார அமைப்புகள் மற்றும் அவற்றைச் சார்ந்த சிந்தனைகளை மிக வன்மையாக கண்டிக்கின்றது மற்றும் ஒற்றுமையானது வறுமை மற்றும் சமத்துவமின்மையின் கட்டமைப்பு காரணிகளுக்கு எதிராக போராடுவது ஆகும் எனவும் கூறி நிற்கின்றது ஆகவே



ஒட்டுமொத்தத்தில் இம்மடல் சமூக ஈடுபாட்டின் ஊடாக நற்செய்தியை அறிவிக்கும் கலாச்சார நடைமுறையாக வார்த்தைகளை அறிவிக்கவும் அழைக்கின்றது இவ் ஆவணம் திரு அவையின் நோக்கை செயல்படுத்த வேண்டும் என்பதனை கூறி நிறைவுறுகிறது ஏழைகளுக்கு முன்னுரிமை அளித்து நாமும் மக்களோடு மக்களாக துன்புறும் ஊழியர்களாக மறுகிறிஸ்துக்களாக மாறுவோம் நாட்டையும் மாற்றுவோம்.

சகோதர் விஜயின் மட்டக்களப்பு

நீதிநிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் நிறைவுபெறுவர்.

பைபிள் ஹீரோக்கள்


21

தொடர்ச்சி.....

சிறுவர்களே! உங்களுக்காக

ஆக்கம் : இவஞ்ஜலிஸ்டா வினோலிசன்

சாமுவேல்



எப்ராயிமைச் சார்ந்த ஏல்கானா-அன்னா தம்பதியருக்கு குழந்தைகள் இல்லை. எனவே குழந்தை வரம் கேட்டு ஆண்டவர் சந்திதியில் அழுது புலம்பினாள். அவளுக்கு ஆண் பிள்ளை கிடைப்பின் அவனை ஆண்டவருக்கு அர்ப்பணிப்பதாக மன்றாடினாள்



இரவில் தூங்கிக் கொண்டிருந்த சாமுவேலை ஆண்டவர், 'சாமுவேல்', 'சாமுவேல்' என மும்முறை அழைக்க மூன்று முறையும் ஏலியிடம் சென்று, ஏன் எனக் சாமுவேல் கேட்க, ஏலி ஆண்டவர் தான் அழைப்பதை உணர்ந்தவராய், மீண்டும் குரல் கேட்டால், "ஆண்டவரே பேசும், உம் அடியான் கேட்கிறேன்" எனச் சொல் என சொல்லி அனுப்பினார்.

இறையருளால் தான் பெற்ற மகனுக்கு, "நான் ஆண்டவரிடமிருந்து கேட்டேன் எனச் சொல்லி, 'சாமுவேல்' எனப் பெயரிட்டார்"






திரும்ப ஆண்டவர் அழைத்த போது, சாமுவேல் "ஆண்டவரே பேசும், உம் அடியான் கேட்கிறேன்" என கூறியபோது தீயவர்களாக இருந்த ஏலியின் புதல்வர்களை தண்டிக்கப் போவதையும் தாம் செய்யவிருப்பவற்றையும் கூறினார். சாமுவேல் வளர்ந்தார். ஆண்டவரும் அவரோடு இருந்தார்



பால்குடி மறந்த சிறுவன் சாமுவேலை ஆலயத்தில் குருவாயிருந்த ஏலியிடம் ஒப்படைத்தார்

அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்

குறுக்கெழுத்துப்போட்டி



குறுக்கெழுத்துப்போட்டி
முன்னைய இதழின் விடைகள்

இடமிருந்து வலம்

1 - பன்னிரெண்டு

19 - கற்பலகை

32 - நீர்

35 - விழி

மேலிருந்து கீழ்

1 : பரலோகம்

3 : பனி

6 : ஆடு

16 : அலகை

30 : ஆழி

மேலிருந்து கீழ்

2 : (தலைகீழ்) இஸ்ராயேல் மக்களை இந்நிலையில் இருந்து இறைவன்விடுவித்தார்.

6 : இறைவனின் இட்ட இதனால் சோதோம் கொமோரா அழிந்தது.

9 : இயேசுவிற்கு பதிலாக பிலாத்துவால் விடுவிக்கப்பட்டவன்.

13 : சோதனைக்காரன் இவன்

16 : "மடல்" என்றும் கூறலாம்.

29 : "இல்லை" என்பதன் எதிர்பதம் (தலைகீழ்)

30 : ஒரு பெண்ணின் பெயர் (தலைகீழ்)

இடமிருந்து வலம்

1 : நிதானத்திற்கும் விவேகத்திற்கும் உதாரணமான பிராணி

4 : பழைய ஏற்பாட்டில் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டவர்.

8 : மேல்மாடிக்கு இதன்வழியாக செல்வர் (இடம்மாறியுள்ளது)

13 : "சனநாயகம்" என்பதன் மறுபெயர் இடம்மாறியுள்ளது.

21 : தாவீது அரசர் நடனம் ஆடியும் இப்படியும் கடவுளைப் புகழ்ந்தார்

27 : சிலுவைப்பாதையில் 14 இவைகள் உண்டு (இடம்மாறியுள்ளது)

31 : அழகிய விழிகள் கொண்ட விலங்கிது (இடம்மாறியுள்ளது)

34 : உலகில் முதலாவதாக படைக்கப்பட்ட மனிதன். (இடம்மாறியுள்ளது)

"தாய்" வாசக நெஞ்சங்களே!

தற்போது "தாய்" சஞ்சிகையை www.colombostjosephvazmandram.lk என்ற இணையதளத்தின் ஊடாகவும் நீங்கள் காணலாம் என்பதை அறியத் தருகின்றோம். இதன்மூலமாக வெளிநாட்டில் உள்ளவர்களும் இத் தாய் சஞ்சிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

புயலே டித்வா!
24ம் பக்கம் தொடர்ச்சி

வந்து நிற்பதை நீ காணமல் போய்விட்டாயே!
கோடி ரூபாய் பெறுமதியான பொருட்களுடன்
வந்த விமானங்களையும் கப்பல்களையும்
மனித உதவி மற்றும் மருத்துவ உதவிகளையும்
அரச வங்கிக்கணக்கில் விழுந்த பணத்தையும்
காண உனக்குத்தான் கொடுத்துவைக்கவில்லை;!

உன்னால் உருவான மக்கள்
வெள்ள நிவாரண மையங்கள் எதுதுணை எத்துணை?
உதவிசெய்யவென்று தானாக உருவாக
நட்புக்குழுக்கள் எத்துணை எத்துணை?
நினைத்துக் கூட பார்க்க முடியவில்லையே?

இது என் எழுத்துக்கள் என்று நினைத்து விடாதே!
இவை என் விழியிலிருந்து வந்த கண்ணீர் துளிகளே!
அது உன்னால் ஏற்றபட்ட துன்பத்தையும்
அதனூடாக என்நாட்டு மக்களில் நான் கண்ட
ஒற்றுமையினாலான பேரின்பத்தையும் சொல்லும்.

உள்நாட்டுப்போர், ஆழிப்பேரலை, கொரோனா,
பொருளாதார வீழ்ச்சி அடுத்ததாக டித்வா! உன் வரவு.
தாங்குமா இந்த நாடு!
எத்தனை முறை வீழ்ந்தாலும்
நாம் மீண்டெழுவோம் இலங்கையர் எனும்
ஓரினமாய்!

- வஸ்டீன் -

கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்தின்
2025/2026 ஆண்டிற்கான இயக்குனர்கள் குழு

திரு. ஜோன்சன் பெஸ்டியன்	- President
திரு. புஷ்பா கோமஸ்	- In - Charge over 53 Group
திரு. S.ஞானப்பிரகாசம்	- Secretary
திரு. N.எனஸ்டன் பெர்னாண்டோ	- Treasurer
திரு. லெனார்ட் பீரிஸ்	- In - Charge Members Welfare
திரு. எமில் பெர்னாண்டோ	- In - Charge 38-53 Group
திரு. N.ஜினோத்	- In - Charge Communication Group
திரு. டெரன்ஸ்	- In - Charge Below 38 Group
திரு. எமில்டன் பெர்னாண்டோ	- Assistant Secretary
திரு. மெக்லன் நவராஜ்	- Secretary Members Welfare
திருமதி. சுமதி கோமஸ்	- In - Charge Service Group



"தம் சகோதரர் சகோதரிகளிடம் சினங்கொள்கிறவர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவார்"


SINCE 2015
JRCA
JRCA DIGITAL GRAPHICS
PRIVATE LIMITED
WE WISH YOU A
Merry Christmas
AND HAPPY NEW YEAR
Graphic Designing
Type Setting
T-Shirt Designing
Banner Printing
Flag Printing
Cloth Printing
Book Printing
Book Binding
Birthday Cards
Invitations
DVD ,CD Printing
ID Cards Printing
Visiting Cards
Duplo Printing
Digital Printing
Offset Printing
No: 78, Brass Founders Street,
Colombo-13.
Tel: 075 777 6646, 077 177 6646

ANTON

Anton ENTERPRISES

ENTERPRISES



WE WISH YOU A

Merry Christmas

AND HAPPY NEW YEAR

No. 51, 59, 60. People's Park Shopping Complex,Colombo - 11.

Tel: 011-2541041, 011 4325243. Fax: 011 2440800. Frame Shop: 011 4325242.

"மறை வளர ஒன்றிணைவோம்"

இச்சஞ்சிகை அருட்பணி. ஆனந்த பெர்னாண்டோபுள்ளே அடிகளாரால் 25.12.2025 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Printed by : JRCA Digital Graphic (Pvt) Ltd., No. 78, Brass Founder Street, Colombo - 13. :077 177 6646 : 075 777 6646